**C.O.S.No.01/2022** தேதி – 12.08.2026

**பி.வா.சா.1. – முகம்மது அப்துல் காதர்**

**வாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி–**

நான் பர்கானா என்ற பெயரில் ஏலக்காய் ஏற்றுமதி செய்து வருகிறேன் என்றால் சரிதான். நான் இங்கிருந்து அனுப்பும் ஏலக்காய் பர்கானா என்ற பெயர் போட்ட கவரில்தான் ஏற்றுமதி செய்யப்படுகிறது என்றால் சரிதான். அந்த கவர்கள் அனைத்தும் இந்தியாவில்தான் அச்சடித்து தயாரிக்கப்படுகிறது என்றால் சரிதான். அந்த கவரில் உள்ள டிசைன் எங்களது நிறுவனத்திலிருந்துதான் அச்சடிக்கும் கம்பெனிக்கு அனுப்படுகிறது என்றால் சரிதான். அந்த அச்சடிக்கும் டிசைன்ஸ் உரிமையாளர் 2ம் பிரதிவாதியிடம் இருந்துதான் வாங்கி அச்சடிக்கப்படுகிறது. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.4 ல் உள்ளபடி டிசைனில் தான் அச்சடிக்கப்படுகிறது என்றால் சரிதான். வா.சா.ஆ.4 ல் உள்ள டிசைன்ஸ் அச்சடித்தப் பிறகுதான் ஏற்றுமதி செய்யப்படுகிறது என்றால் சரிதான். நாங்கள் அச்சடிக்கும் டிசைனின் கவரை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளோமா என்றால் டிசைனின் வரைபடத்தை தாக்கல் செய்துள்ளோம். நான் இந்த நீதிமன்றத்தில் அந்த அச்சடிக்கப்பட்ட டிசைன் கவரையோ, அல்லது டிசைனையோ தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் அந்த வரைபடத்திற்கான அனுமதி கடிதத்தை தாக்கல் செய்துள்ளோம். நான் தாக்கல் செய்த பி.வா.சா.ஆ.2 ல் வரைபடம் உள்ளதா என்றால் இல்லை. நான் தாக்கல் செய்த பி.வா.சா.ஆ.2 ல் பர்கானா என்ற பெயர் மட்டும்தான் உள்ளது என்றால் சரிதான். நாங்கள் எந்த நிறுவனத்திற்கு மேற்படி கவரை அச்சடிக்கிறோம் என்ற விபரத்தை சொல்லியுள்ளோமா என்றால் இல்லை. நாங்கள் அச்சடிக்கும் பிரிண்டிங் கம்பெனி ஆர்டரோ, இன்வாய்சோ இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளோமா என்றால் இல்லை. 2ம் பிரதிவாதிதான் இந்த பிராண்டின் உரிமையாளர் என்றாலும், நாங்கள்தான் இந்த டிசைனை அச்சடிக்கும்

நிறுவனத்திற்கு வழங்குகிறோம் என்றால் 2ம் பிரதிவாதியினுடைய ஆர்டரின் பேரில் நாங்கள் கொடுக்கிறோம். இந்த பொதிகள் அச்சடிக்கப்பட்ட பேக்கேஷ் கவர், ஏலக்காய் போட்ட பேக்கேஷ் கவரை நாங்கள் தான் ஏற்றுமதி செய்கிறோம் என்றால் உரிமையாளரான 2ம் பிரதிவாதிக்கும், அவர்கள் சொன்ன நிறுவனத்திற்கும் நாங்கள் அனுப்புகிறோம். 1ம் பிரதிவாதி ஏற்றுமதி செய்யும் பேக்கேஷ் கவரை நீதிமன்றம் ஆணையிட்டால் தாக்கல் செய்யலாம் என்றால் சரிதான். நீங்கள் ஏற்றுமதி செய்யும் பொதிகள் அச்சடித்த கவரை, இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்தால் முக்கிய ஆதாரமாக இருக்கும் என்பதால் நாங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் நாங்கள் கவரை ஏற்றுமதி செய்யவில்லை, கவரில் போடப்பட்ட ஏலக்காயைத்தான் ஏற்றுமதி செய்கிறோம். வாதியுடன் ஏற்றுமதி செய்யப்படும் பேக்கேஷ் மற்றும் 1ம் பிரதிவாதி ஏற்றுமதி செய்யப்படும் பேக்கேஷ் இரண்டையும் ஒப்பிட்டு பார்க்காமல் இருக்கவே நாங்கள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் வாதி ஏற்றுமதி செய்யப்படும் கவரின் விபரம் எனக்கு தெரியாது. அந்த பொதிகள் உள்ள பேக்கேஷ் தாக்கல் செய்யப்பட்டால் இந்த வழக்கில் உள்ள சர்ச்சைகளுக்கு தீர்வு காண முடியும் என்றால் உரிமையாளரான 2ம் பிரதிவாதியை சார்ந்தது ஆகும். இந்த பேக்கேஷ் கவர் அனைத்தும் எங்களது கம்பெனியில் உள்ளது என்று சொன்னால் ஆர்டர் கிடைக்கும்போது நாங்கள் வாங்கி ஏலக்காய் கவரில் போட்டு ஏற்றுமதி செய்வோம். கவரை ஏற்றுமதி செய்யவில்லை. 2ம் பிரதிவாதிக்கும், எங்களுக்கும் நடக்கும் தொழிலுக்கான பர்ச்சேஸ் ஆர்டர், இன்வாய்ஸ் ஆகியவற்றை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளோமா என்றால் நீதிமன்றம் கேட்கும் சமயத்தில் நாங்கள் தாக்கல் செய்கிறோம். இந்தியாவில் இந்த பொதிக்கும், இந்த பெயருக்கும் வாதிதான் உரிமையாளர் என்றும், 1ம் பிரதிவாதி இந்தியாவில் இந்த பொதியையும், இந்த பெயரையும் அச்சடிக்கவோ, பயன்படுத்தவோ உரிமை இல்லை என்றால் இதன் உரிமையாளரான 2ம் பிரதிவாதி ஷா ஆலம் அப்துல்லா

மகபூஸ் என்ற நிறுவனத்திற்கு ஏற்றுமதிதான் செய்கிறோம். இந்தியாவில் நாங்கள் விற்கவோ, விற்பனை செய்யவோ இல்லை. 2ம் பிரதிவாதி, இந்த டிசைன் மற்றும் பெயருக்கு இந்தியாவில் உரிமையாளர் இல்லை என்றால் அவர் அரபு நாடுகளில் உரிமை பெற்று இருக்கிறார். வாதி கோரும் அனைத்து பரிகாரமும் கிடைக்க கூடியது என்றால் சரியல்ல.

**<u>2ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

பர்கானா என்ற பெயரையும், டிரேடு மார்க்கையும் 2ம் பிரதிவாதிதான் கண்டு பிடித்தார் என்றால் சரிதான். அவரது கற்பனையில் உதித்து பதிவு செய்துள்ளார். பர்கானா டிரேடு 2ம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான். 2ம் பிரதிவாதியின் அனுமதியின்பேரில்தான் நாங்கள் ஏலக்காய்களை ஏற்றுமதி செய்தோம் என்றால் சரிதான். பர்கானா என்ற பெயருக்கும், அந்த டிரேடு மார்க்குக்கும், வாதிக்கும் எந்தவிதமான சம்பந்தமும் இல்லை என்றும், வாதி அதில் எந்தவித உரிமை கோர முடியாது என்றால் சரிதான்.

**<u>மறுவிசாரணை</u>** – இல்லை.

என்னால் திறந்த நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக்காள்ளப்பட்டது.

முதன்மை மாவட்ட நீதிபதி,
ஸ்ரீவில்லிபுத்தூர்.